

ஆரம்பாக்கத்தில் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு ரத்ததான முகாம் நடைபெற்றபோது எடுத்தபடம். (அடுத்தபடம்) ரத்ததானம் செய்தவர்களுக்கு காந்தி அறக்கட்டளை நிறுவனத் தலைவர் எம்.எல்.ராஜேஷ் சான்றிதழ் வழங்குகிறார் அருகில், ஜான்வெஸ்லி உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் உள்ளனர்.

# காந்தி ஜெயந்தியை முன்னிட்டு ஆரம்பாக்கத்தில் ரத்ததான முகாம்

பெரியபாளையம், அக்.4-

ஆரம்பாக்கத்தில் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு நடைபெற்ற ரத்ததான முகாமில் 75 பேர் ரத்த தானம் வழங்கினர். திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி ஒன்றியம் ஆரம்பாக்கம் மகாராஜா அகரசன் வித்யாலயா பள்ளியில் காந்தியடிகளின் 144 -வது பிறந்தநாளை முன்னிட்டு ரத்ததான முகாம் நடைபெற்றது. இதனை காந்தி அறக்கட்டளை நிறுவனத் தலைவர் எம்.எல்.ராஜேஷ் துவக்கி வைத்தார். காலை முதல் மதியம் வரையில் நடைபெற்ற இந்த முகாமில் 75 பேர் வழங்கிய ரத்தத்தை சென்னை அரசு பொது மருத்துவமனைக்கு கொண்டு போய் வழங்கினர். ரத்ததானம் செய்த அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை காந்தி அறக்கட்டளை நிறுவனத்தின் நிர்வாகிகள் ஜான்வெஸ்லிபரணிகுமார், முருகன், பாபு, சதீஷ் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.